செ.வெ.எண்: 814/2016 நாள்: 21.11.2016

## எச்.ஐ.வி/எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம்

கன்னியாகுமரி மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவகத்தின் சார்பாக திங்கள்கிழமை தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டுவருகிறது. இந்த முகாமில் எச்.ஐ.வி/எய்ட்ஸ், காசநோய், இரத்ததானம் பால்வினைநோய் மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுடன் வாழ்பவர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு துண்டுபிரசுரங்களும் வழங்கப்படுகிறது. மேலும் இன்று நடைபெற்ற (21.11.2016) இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு பொதுமக்களுக்கு துண்டுபிரசுரங்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலகத்தின் சார்பாக, மாவட்ட திட்ட மேலாளர் மரு. ஸ்டெல்லா ஜெனட் மற்றும் நடமாடும் நம்பிக்கைமைய பணியாளர்கள், திருமதி. கிறிஸ்டி ஜெர்லின், ராஜசேகர், மணிகண்டன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு
மற்றும் கட்டுப்பாட்டு அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.